புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635

T/PN/2025/1216/7215/1419


# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்


நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 191 · 15-01-2026 · வியாழன் · பக்கம்- 12 · விலை- ரூ.5 · திருச்சி

Volum 01 · Issue: 191 · 15-01-2026 · Thursday · Pages - 12 · Price- Rs. 5 · Trichy





தமிழக வெற்றிக் கழகம் - திருச்சி தெற்கு மாவட்டம் - மணப்பாறை சட்டமன்ற தொகுதி


அனைவருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின்
சார்பில்
இனிய
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
ந.முருகேசன் D.EEE.,
நகர தலைவர்
திருச்சி தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி
மணப்பாறை நகர காங்கிரஸ் கமிட்டி


மணப்பாறை சட்டமன்ற தொகுதி
மக்கள் அனைவருக்கும்
இனிய
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
இல்லங்கள் தோறும்
மகிழ்ச்சி பொங்கட்டும்...
ப.அப்துல் சமது MLA
மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர்,தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவர்
தமிழ்நாடு வஃபு வாரிய உறுப்பினர்


தமிழக வாழ்வுரிமைக்கட்சி
15- ஆம் ஆண்டு துவக்க விழா
தமிழர் திருநாளாம்... பொங்கல் திருவிழா
செஞ்சி சட்ட மன்றத் தொகுதி
விழுப்புரம் மாவட்டம் (வடக்கு)
அமைப்பு :
ரா.சிவா
விழுப்புரம் மாவட்ட ஊடக
பிரிவு செயலாளர்.
செஞ்சி-9865109570

# ஆலாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி
## நாமக்கல் மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
திராவிட மாடல்
**பொற்கால ஆட்சியில்**
நான்கு ஆண்டுகளில் ஆலாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சியின் சாதனைகள்

**2021-2022, 2022-2023, 2023-2024, 2024-2025, 2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்**

| வ. எண் | வேலையின் பெயர் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் – வடிகாலுடன் கூடிய கான்கிரீட் சாலை அமைத்தல் | 1 | 45.00 |
| 2 | 15வது நிதிக்குழு மான்யம் - I & II – 2021–2022 | 5 | 49.25 |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 – புதிய நவீன கழிப்பிடம் அமைத்தல் | 1 | 12.00 |
| 4 | நபார்டு RIDF XXVIII – தார்சாலை அமைத்தல் | 1 | 88.00 |
| 5 | 15வது நிதிக்குழு மான்யம் - I & II – 2022–2023 | 10 | 79.00 |
| 6 | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022–2023 – சாலைகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 1 | 41.10 |
| 7 | மூலதன நிதி மான்ய திட்டம் 2022–2023 – வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல் | 1 | 35.60 |
| 8 | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2023–2024 – சிமெண்ட் கான்கிரீட் சாலை பராமரிப்பு செய்தல் | 1 | 33.00 |
| 9 | நபார்டு RIDF XXVIII 2023-2024 – தார்சாலை அமைத்தல் | 1 | 95.60 |
| 10 | அம்ரூத் 2.0 2023–2024 – பூங்கா அமைத்தல். | 1 | 23.00 |
| 11 | நமக்கு நாமே 2023–2024 – மழைநீர் வடிகால் அமைத்தல் | 1 | 14.75 |
| 12 | இயக்கம் மற்றும் பராமரிப்பு 2023–2024– சமுதாய கூடம் மற்றும் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 1 | 40.00 |
| 13 | 15வது நிதிக்குழு மான்யம் - I & II - 2023-2024 | 5 | 41.25 |
| 14 | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2024–2025 – சாலைகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 1 | 78.00 |
| 15 | 15வது நிதிக்குழு மான்யம் - I & II - 2024-2025 | 4 | 40.55 |
| 16 | நபார்டு RIDF XXX 2024-2025 – தார்சாலை அமைத்தல் | 1 | 102.00 |
| 17 | சிறப்பு நிதி திட்டம் 2025–2026 தார்சாலை அமைத்தல் | 2 | 94.00 |
| 18 | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2025–2026 – சாலைகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 1 | 39.00 |
| 19 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் திட்டம் 2025– 2026 தார்சாலை அமைத்தல் | 1 | 71.50 |
| 20 | இயக்கம் மற்றும் பராமரிப்பு திட்டம் 2025–2026 விலங்குகள் கட்டுபாட்டு மையம் பராமாரிப்பு பணிகள் | 1 | 5.00 |
| 21 | 15வது நிதிக்குழு மான்யம் - I & II - 2025-2026 | 6 | 48.55 |
| | மொத்தம் | **47** | **1076.15** |

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்**



திருமதி.பா.சகுந்தலா
தலைவர்
ஆலாம்பாளையம்
தேர்வுநிலை பேரூராட்சி

திரு.கே.சண்முகப்பிரியா
துணைத் தலைவர்
ஆலாம்பாளையம்
தேர்வுநிலை பேரூராட்சி

முனைவர்.சு.கீதா M.A., M.Phil., PhD.,
செயல்அலுவலர்
ஆலாம்பாளையம்
தேர்வுநிலை பேரூராட்சி

திருமதி.துர்கா மூர்த்தி இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித்தலைவர்
நாமக்கல் மாவட்டம்

மற்றும் வார்டு உறுப்பினர்கள்,
ஆலாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி, நாமக்கல் மாட்டம்.

# சலங்கபாளையம் பேரூராட்சி
## ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
திராவிட மாடல்
**பொற்கால ஆட்சியில்**
நான்கு ஆண்டுகளில் சலங்கபாளையம் பேரூராட்சியின் சாதனைகள்

**2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்**

| வ.எண் | திட்டப்பணிகளின் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | நபார்டு நிதி உதவி திட்டம் (RIDF-XXX) 2024-2025 | 1 | 90.00 |
| 2 | பள்ளி மேம்பாட்டு மானியம் 2024-2025 | 3 | 50.20 |
| 3 | 15வது நிதிக்குழு மான்யம் டைய்டு முதல் தவணை 2024-2025 | 6 | 29.00 |
| 4 | 15வது நிதிக்குழு மான்யம் அன்டைய்டு முதல் தவணை 2024-2025 | 1 | 19.00 |
| 5 | 15வது நிதிக்குழு மான்யம் டைய்டு இரண்டாம் தவணை 2024-2025 | 2 | 34.00 |
| 6 | 15வது நிதிக்குழு மான்யம் அன்டைய்டு இரண்டாம் தவணை 2024-2025 | 3 | 23.95 |
| 7 | மூலதன மானிய நிதி 2025-2026 | 1 | 96.00 |
| 8 | சிறப்பு நிதி 2025-2026 | 1 | 148.00 |
| 9 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2025 | 1 | 32.00 |
| 10 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025-2026 | 2 | 29.50 |
| 11 | பள்ளி மேம்பாட்டு மானியம் 2025-2026 | 1 | 35.00 |
| 12 | 15வது நிதிக்குழு மான்யம் டைய்டு முதல் தவணை 2025-2026 | 2 | 30.00 |
| 13 | 15வது நிதிக்குழு மான்யம் அன்டைய்டு முதல் தவணை 2025-2026 | 1 | 19.00 |
| 14 | 15வது நிதிக்குழு மான்யம் டைய்டு இரண்டாம் தவணை 2025-2026 | 3 | 29.00 |
| 15 | 15வது நிதிக்குழு மான்யம் அன்டைய்டு இரண்டாம் தவணை 2025-2026 | 1 | 19.00 |
| | மொத்தம் | 29 | 683.65 |

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

திருமதி.மி.மணிமேகலை
தலைவர்,
சலங்கபாளையம் பேரூராட்சி

திருமதி.கு.மாலதி
துணைத்தலைவர்
சலங்கபாளையம் பேரூராட்சி

திருமதி.சீ.தே.சசிகலா
செயல் அலுவலர்,
சலங்கபாளையம் பேரூராட்சி

# சித்தோடு (தேர்வுநிலை) பேரூராட்சி
## ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
திராவிட மாடல்
**பொற்கால ஆட்சியில்**



நான்கு ஆண்டுகளில் சித்தோடு (தேர்வுநிலை) பேரூராட்சியின் சாதனைகள்

**2021-2022, 2022-2023, 2023-2024, 2024-2025, 2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்**

**2021-22 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் விபரம்**

| வ. எண். | திட்டப்பணிகள் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 15வது நிதிக்குழு மான்யம் 2020-21 (அடிப்படை மான்யம்) | 1 | 13.00 |
| 2 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) | 1 | 134.80 |
| 3 | மூலதன மானிய நிதி 2021-2022 | 1 | 30.00 |
| 4 | 15–வது நிதி ஆணைய மானியம் | 2 | 11.50 |
| 5 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2021–2022 | 2 | 34.50 |
| | மொத்தம் | 7 | 223.80 |

**2022-23 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் விபரம்**

| வ. எண். | திட்டப்பணிகள் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | SBM 2.0 – திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) | 1 | 40.64 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 2 | 16.25 |
| 3 | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் | 1 | 93.16 |
| 4 | பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்ட நிதி | 1 | 20.00 |
| 5 | 15–வது நிதி ஆணைய மானியம் | 4 | 21.50 |
| 6 | நமக்கு நாமே திட்டம் | 1 | 16.00 |
| | மொத்தம் | 10 | 207.55 |

**2023–24 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | 15–வது நிதி ஆணைய மானியம் | 12 | 83.06 |
| 2 | நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) | 1 | 41.80 |
| 3 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் | 2 | 142.05 |
| 4 | அம்ருத் 2.0 திட்டம் | 1 | 19.00 |
| 5 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLA FUND) | 2 | 48.00 |
| 6 | நமக்கு நாமே திட்டம் | 1 | 18.00 |
| 7 | மூலதன மானிய நிதி (CGF) | 1 | 18.00 |
| 8 | 15வது நிதி ஆணைய சுகாதார மானியம் (15th SFC) | 1 | 50.00 |
| 9 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி | 2 | 34.65 |
| 10 | நபார்டு | 1 | 92.00 |
| 11 | பள்ளி மேம்பாட்டு மானியம் – ஆறாவது நிதி குழு மான்யம் | 1 | 4.80 |
| | மொத்தம் | 25 | 551.36 |

**2024–25 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 2 | 10.50 |
| 2 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் | 1 | 57.00 |
| 3 | நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் | 1 | 119.99 |
| 4 | 15–வது நிதி ஆணைய மானியம் | 5 | 31.00 |
| 5 | நபார்டு | 1 | 110.00 |
| 6 | பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்ட நிதி | 2 | 12.00 |
| | மொத்தம் | 12 | 340.49 |

**2025–26 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | நமக்கு நாமே திட்டம் | 1 | 1.23 |
| 2 | SFC (URDF) | 1 | 110.00 |
| 3 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLA FUND) | 1 | 10.00 |
| 4 | 15–வது நிதி ஆணைய மானியம் | 6 | 42.10 |
| 5 | பள்ளி மேம்பாட்டு மானியம் 2025–2026 | 1 | 40.00 |
| 6 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2025–2026 | 2 | 152.00 |
| | | 12 | 355.33 |
| | பெருமொத்தம் | 66 | 1678.53 |

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்**



திருமதி.கண்ணகி தம்பணன்
தலைவர்
சித்தோடு தேர்வுநிலை பேரூராட்சி

திரு.K.C.தங்கவேல்
துணைத்தலைவர்
சித்தோடு தேர்வுநிலை பேரூராட்சி

திரு.து.கோமதி
செயல் அலுவலர்
சித்தோடு தேர்வுநிலை பேரூராட்சி

சித்தோடு தேர்வுநிலை பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்

வார்டு உறுப்பினர்கள் :
திருமதி.சு.கோமளாதேவி சுப்பிரமணியன்
திரு.மு.வரதராஜன்
திருமதி.பா.சித்ராதேவி பாலாஜிராஜன்
திருமதி.வி.முருகம்மாள் விஜயக்குமார்
திருமதி.ந.கவிதா நந்தகோபால்
திரு.சு.ரமேஷ்
திருமதி.தீ.நதியா தீபக்
திரு.செ.குமார்
திருமதி.மா.தேன்மொழி மாரியம்மன்
திருமதி.அ.தனலெட்சுமி அருணாசலம்
திருமதி.சு.அம்பிகா சுரேஷ்குமார்
திரு.அ.சுப்பிரமணியம்
திரு.கு.வசந்தி குமார்
















## பொங்கல் பண்டிகை: அதிகக் கட்டணம் வசூலித்த 30 ஆம்னி பேருந்துகள் மீது நடவடிக்கை போக்குவரத்து ஆணையர் தகவல்

"பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்கள் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி அதிகக் கட்டணம் வசூலித்த 30 ஆம்னி பேருந்துகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு (12.01.2026 முதல் 18.01.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யும் நடவடிக்கையை தடுக்கும் பொருட்டு, வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச் சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு தமிழகம் முழுவதும் 45 சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு 13.01.2026 வரை 3,337 ஆம்னி பேருந்துகள் தணிக்கை செய்யப்பட்டு 547 சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தணிக்கையின்போது இணக்க கட்டணம் ரூ.2,46,000 மற்றும் வரியாக ரூ.41,77,362 வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சிறப்பு தணிக்கையில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்பட்ட 30 ஆம்னி பேருந்துகளுக்கு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அதிகக் கட்டணம் வசூலிக்கப்படும் ஆம்னி பேருந்துகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பயணிகள் எந்தவித சிரமமின்றி அவர்களது சொந்த ஊர்களுக்கு சென்றடைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ",




## புதுச்சேரி உழவர்கரை அமமுக இணை செயலாளர் லாவண்யா அலுவலகத்தில் வளைகாப்பு விழா: நெகிழ்ச்சியில் தம்பதியினர்



புதுச்சேரி:ஜன. 15–

புதுச்சேரி மூலக்குளம் ஜே.ஜே நகர் முதல் தெருவைச் சேர்ந்த மகேஸ்வரிகாளிதாசன் தம்பதியினருக்கு, ஐந்தாம் மாத வளைகாப்பு நிகழ்ச்சி உழவர்கரை பகுதியில் அமைந்துள்ள அமமுக அலுவலகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் புதுச்சேரி மாநில கழக இணை செயலாளர் (மேற்கு) முனைவர் லாவண்யா அவர்களின் முன்னிலையில் இந்த விழா நடத்தப்பட்டது. வழக்கமாக வீடுகளிலோ அல்லது திருமண மண்டபங்களிலோ நடைபெறும் வளைகாப்பு நிகழ்ச்சியைத் தள்ளி வைத்துவிட்டு, லாவண்யா அவர்களின் அலுவலகத்திலேயே நடத்தத் தம்பதியினர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பிறக்கப்போகும் தங்களின் குழந்தை, முனைவர் லாவண்யா அவர்களின் ஆசீர்வாதத்தோடு நலமுடன் பிறக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தம்பதியினர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

விழாவில் மகேஸ்வரி அவர்களுக்கு வளையல்கள் அணிவிக்கப்பட்டு, பாரம்பரிய முறைப்படி மங்கலப் பொருட்கள் வழங்கப்பட்டன. லாவண்யா அவர்கள் தம்பதியினரை வாழ்த்திச் சிறப்பித்தார். அரசியல் பிரமுகரின் அலுவலகத்தில் நடந்த இந்த பாசப்பிணைப்பு மிக்க வளைகாப்பு நிகழ்ச்சி அப்பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421

# ஜாலி டூரிசம் ஆன்லைன் கோலம் போட்டி: வெற்றியாளர்களுக்கு ரூ. 1.5 லட்சம் பரிசு வழங்கப்பட்டது!



புதுச்சேரி: ஜன.15–

பாரம்பரிய கலை வடிவமான கோலத்தை ஊக்கப்படுத்தும் வகையில், 'ஜாலி டூரிசம்' (Jolly Tourism) நிறுவனம் சார்பில் இணைய வழியாக (Online) நடத்தப்பட்ட கோலம் போட்டியின் வெற்றியாளர்களுக்கு பரிசு வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாண்புமிகு ராஜ்ய சபா உறுப்பினர் திரு. செல்வ கணபதி அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு, வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

மேலும், புதுச்சேரி மீனவர் தொடக்க கடன் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் நா. புகழேந்தி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவினை மெருகூட்டினார்.

இந்த ஆன்லைன் போட்டியில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியிலிருந்து ஏராளமானோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். அதில் மிகச்சிறந்த கோலங்களை வரைந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டு பின்வரும் பரிசுகள் வழங்கப்பட்டன:

முதல் பரிசு (ரூ1,00,000): ரா. கண்ணகி (D/O ராமகிருஷ்ணன்), கடலூர்.

இரண்டாம் பரிசு (ரூ.50,000): ஸ்ரீ கார்த்திக், தூத்துக்குடி.

முக்கிய பரிசுகள் தவிர, சிறப்பாகப் பங்கேற்ற மேலும் 10 நபர்களுக்கு ஆறுதல் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆறுதல் பரிசுகள் அனைத்தும் வெற்றியாளர்களின் வீட்டு முகவரிக்கு நேரடியாக அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் சிறப்பம்சம்: டிஜிட்டல் தளத்தைப் பயன்படுத்தி நமது பாரம்பரியக் கலையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் முயற்சியாக இந்தப் போட்டி அமைந்தது. பொதுமக்களின் பெரும் வரவேற்பைப் பெற்ற இந்த நிகழ்வு, மிகுந்த மகிழ்ச்சியும் மரியாதையும் நிறைந்த சூழலில் இனிதே நிறைவடைந்தது.

# கோபால் ஏற்பாட்டில் உருளையன்பேட்டையில் கோலப்போட்டி : அமைப்பாளர் சிவா பரிசுகள் வழங்கினார்!

புதுச்சேரி, ஜன. 15–

புதுச்சேரி மாநிலம் உருளையன்பேட்டை தொகுதி திமுக சார்பில் திமுக மாநில அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திருமிகு. இரா. சிவா அவர்கள் தலைமையில், திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர், தொகுதி பொறுப்பாளர் திரு. எஸ். கோபால் அவர்கள் முன்னிலையில், தொகுதி செயலாளர் திரு. சக்திவேல், தொகுதி துணை செயலாளர் கண்ணதாசன், கிளை செயலாளர்கள் இளங்கோ மற்றும் சரவணன் மேற்பார்வையில் நேற்று 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 06.00 மணிமுதல் ராஜா நகர், முத்தமிழ் நகர் மற்றும் அருந்ததி புரம் பகுதிகளில் கோலப்போட்டி நடைபெற்றது. இதில் பகுதி மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வீட்டு வாசலில் கோலமிட்டனர். போட்டியில் பங்குபெற்ற அனைவருக்கும் இன்று 12.01.2026 மாலை 6.00 மணியளவில் ராஜா நகரில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இதில் மாநிலக்கழக அமைப்பாளரும் சட்டமன்ற ஏதிர்க்கட்சித் தலைவருமான திருமிகு. இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். முதல் பரிசு மிக்ஸி 3 நபர்களுக்கு, இரண்டாம் பரிசு ரைஸ் குக்கர் 3 நபர்களுக்கு, மூன்றாம் பரிசு கேஸ் ஸ்டவ் 3 நபர்களுக்கு வழங்கினார். மேலும் கோலப்போட்டியில் கலந்துகொண்ட 450க்கும் மேற்பட்ட பெண்கள் அனைவருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இதில் ராஜாநகர் பகுதி கிளை நிர்வாகிகள் அங்காளன், அந்துவான், அமுல்தாஸ், குப்புசாமி, பத்மநாபன், பாண்டுரங்கன், கணபதி, கவியரசன், சேதுபதி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் லோகேஷ், மாணவர் அணி துணை அமைப்பாளர் அஜய், முருகன், அய்யனார், தமிழ் ஸ்ரீதர், பிரபு மற்றும் முத்தமிழ் நகர் அருந்ததி புரம் பகுதி கிளை நிர்வாகிகள் பிரகாஷ், மோகன் (பிரஸ்), வளாந்தன், ராஜன், மூவேந்தன், முகேஷ், ஜெயசீலன், முகிலன், உமாபதி, நவீன், உள்ளிட்டோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை கவனித்தனர்.

நிகழ்ச்சியில் மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர் அருள்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் அமுதா குமார், நர்கீஸ், பொருளாளர் சசிகுமார், தொகுதி பிரதிநிதி பொன்னுசாமி, மாநில மாணவர் அணி அமைப்பாளர் மணிமாறன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, மகளிர் அணி தலைவி சந்திரகலா, மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சுமதி, தொண்டர் அணி துணை தலைவர் மதனா, மகளிர் அணி துணை அமைப்பாளர் நல்குணா, மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் சித்ரா, ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் அன்பழகன், வர்த்தகர் அணி துணை தலைவர் குரு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை தலைவர் ராஜேஷ், இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஸ்ரீதர், இளைஞர் அணி துணை அமைப்பாளர் தாமரை, அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் ஸ்ரீதர், அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர்கள் அஜிபாஷா, வெங்கடேசன், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் அர்ஜுன், கிளை செயலாளர்கள் கருணாகரன், அகிலன், சண்முகசுந்தரம், கிரி, நெல்சன், சத்தியா, முருகன், சொல்தா ரவி, தொகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஆனந்த், ரமேஷ், முருகன், விக்னேஷ், ஜெயக்குமார், வினோத், சூர்யா, மாணவரணி நிர்வாகிகள் சஞ்சய், தமிழ்ச்செல்வன், சண்முகப்பிரியா மற்றும் பகுதி கிளை கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் உடனிருந்தனர்.

# புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் மாநில இளைஞரணி சார்பில், இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

புதுச்சேரி, ஜன. 15–

சுவாமி விவேகானந்தரின் 163வது பிறந்த நாளை முன்னிட்டு, நாடு முழுவதும் ஜனவரி 12 தேசிய இளைஞர் தினம் கொண்டாடப்பட்டது.

அதனை முன்னிட்டு, புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் மாநில இளைஞரணி சார்பில், இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 70 கிரிக்கெட் அணிகள் பங்கேற்று, சுமார் 1500 வீரர்கள் கலந்து கொண்டனர்.



இந்தப் போட்டியின் முக்கிய நோக்கம், இளைஞர்கள் மத்தியில் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறும் சிந்தனைகளும் பின்பற்றப்பட வேண்டும் என்பதையும்,

தேசிய உணர்வு, தேசபக்தி, சுய ஒழுக்கம், சமூக முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு ஆகியவற்றை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும்.

இந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு ரூபாய் 4 லட்சம் மதிப்பிலான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும், தமிழ்நாடு மாநில முன்னாள் தலைவரும், தேசிய பொதுக்குழு உறுப்பினருமான அண்ணாமலை அவர்கள் இளைஞர்கள் மத்தியில் உரையாற்றி, புதுச்சேரி பாஜக மாநில தலைவர் திரு. ராமலிங்கம் அவர்களின் தலைமையில் வெற்றியாளர்களுக்கு கோப்பை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் புதுச்சேரியைச் சேர்ந்த இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், இந்த நிகழ்ச்சியை மாநில இளைஞரணி தலைவர் திரு. ஆடல் அரசு, இளைஞர் அணி மாநில பொதுச் செயலாளர்கள் திரு. அமுல்ராஜ், திரு.விக்ரமன் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் ஏற்பாடு செய்தனர்.

இந்நிகழ்வில் புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பாராளுமன்ற உறுப்பினர் செல்வ கணபதி, ஜான் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் சாய் சரவணன், . கல்யாண சுந்தரம், செல்வம், தீபாய்ந்தான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அசோக் பாபு, பாஸ்கர், தங்க விக்ரமன், வெங்கடேசன், இளைஞர் அணி தேசிய செயற்குழு உறுப்பினர் காயத்ரி, பாஜக மாநில பொதுச் செயலாளர்கள் .மோகன் குமார், லட்சுமி நாராயணன் மற்றும் பல்வேறு மாநில மாவட்ட தொகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் பாஜக சார்பில் பிரம்மாண்ட பொங்கல் விழா: எம்பி புரந்தேஸ்வரி பங்கேற்பு!



புதுச்சேரி: ஜன.15–

புதுச்சேரி ராஜ்பவன் தொகுதிக்குட்பட்ட வைத்தியகுப்பம் பகுதியில் இன்று பாஜாக சார்பில் பொங்கல் விழா மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் உற்சாகமான வரவேற்புடன் நடைபெற்ற இந்த விழா அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. டக்குபதி புரந்தேஸ்வரி அவர்கள் கலந்து கொண்டார். அவருக்குப் புதுச்சேரி எல்லையில் மலர் தூவியும், மாலை அணிவித்தும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். குறிப்பாக, மேள தாளங்கள் முழங்க, மயிலாட்டம், ஒயிலாட்டம் மற்றும் தப்பாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய பிரம்மாண்ட ஊர்வலம் விழாவிற்கு மெருகூட்டியது.

புதுச்சேரி மாநில பாஜக தலைவர் திரு. ராமலிங்கம் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி முன்னிலை வகித்தார்.

பெண்கள் பங்கேற்பு: விழாவின் முக்கிய நிகழ்வாக, நூற்றுக்கணக்கான பெண்கள் ஒரே இடத்தில் திரண்டு வரிசையாகப் பொங்கல் வைத்து சூரிய பகவானுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

விழாவில் பேசிய எம்பி புரந்தேஸ்வரி, தமிழர்களின் கலாச்சாரத்தையும், விவசாயிகளின் உழைப்பையும் போற்றும் இந்த பொங்கல் பண்டிகை ஒற்றுமையை வளர்க்கும் ஒரு பாலமாக இருப்பதாகக் குறிப் பிட்டார்.

இந்த விழாவில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு பொங்கல் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

# செஞ்சி வட்டார காங்கிரஸ் கமிட்டி சார்பில் ஜம்போதி ஊராட்சி களர்பாளையத்தில் சமத்துவ பொங்கல் விழா

விழுப்புரம், ஜன. 15–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஜம்போதி ஊராட்சி களர்பாளையத்தில் 141 2026,இன்று சமத்துவ பொங்கல்விழா செஞ்சி வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர் வழக்கறிஞர் கா. சக்தி வேல் தலைமையேற்று அனைவருக்கும் கரும்பு, பொங்கல் மற்றும் குழந்தைகளுக்கு பரிசினை வழங்கினார், விவசாய அணி செஞ்சி வட்டார தலைவரும் ஜம்போதி ஏரி நீரிணைபயன்படுத்துவோர் சங்க தலைவருமான அன்பு செழியன் விழாவிற்கான ஏற்பாடுகள் செய்து வரவேற்றார்,விவசாய அணி மாவட்ட தலைவரும் அகலூர் ஏரி நீரிணைபய ன்படுத்துவோர் சங்க தலைவரும் சமூக ஆர்வலருமான அகலூர் ஜோலாதாஸ் முன்னிலை வகித்தனர், சோனியாகாந்தி பேரவை மாவட்ட தலைவர் பொன்பத்தி சினுவாசன், தலைமைக்கழக பேச்சாளர் சம்பத், செம்மேடு கிராம கமிட்டி தலைவர் ரமேஷ், அனந்த புரம் நகரசெயலாளர் பரசுராமன்,சென்னாலூர் கிராமகமிட்டி தலைவர் பரமசிவம்,ஆலம்பூண்டி கிராமகமிட்டி தலைவர் அந்தோணிராஜ், மேல்எடையாலம் சிறுபான்மையினர் கிராமகமிட்டி தலைவர் மாலிக்பாஷா,துரை, பணித்தல பொருப்பாளர் உமா, வெண்ணியம்மாள் மற்றும் கிராம பொது மக்கள் அனைவரும் கலந்துகொண்டு சமத்துவ பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடினார்கள்,ஷீலா நன்றி கூறினார்.




# புதுச்சேரியில் நள்ளிரவில் பயங்கரம்: ஓடும் சொகுசு பேருந்தில் தீ விபத்து : 12 பயணிகள் உயிர் தப்பினர்!

புதுச்சேரி: ஜன.15–

புதுச்சேரியில் இருந்து பொள்ளாச்சி நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பேருந்து நள்ளிரவில் திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

12.01.2026 இரவு சுமார் 10:30 மணி அளவில், புதுச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து பொள்ளாச்சி நோக்கி தனியார் 'ஸ்லீப்பர் கோச்' (ஷிறீமீமீஜீமீக்ஷீ சிஷீணீநீலீ) சொகுசு பேருந்து ஒன்று புறப்பட்டது. பேருந்து புறப்பட்ட 10 நிமிடங்களிலேயே, புதுச்சேரி ஆர்டிஓ (ஸிஜிளி) மேம்பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தபோது, பேருந்தின் ஒரு பகுதியில் இருந்து திடீரென கரும்புகை வெளியேறி தீப்பிடிக்கத் தொடங்கியது.



சாமர்த்தியமாகத் தப்பிய பயணிகள்

தீ பரவுவதைக் கண்டவுடன் ஓட்டுநர் பேருந்தை நிறுத்தினார். பேருந்து நிலையத்திலிருந்து பயணம் தொடங்கிய சில நிமிடங்களிலேயே இந்த விபத்து நடந்ததால், பயணிகள் யாரும் இன்னும் உறங்கச் செல்லவில்லை. இதன் காரணமாக, பேருந்தில் இருந்த 12க்கும் மேற்பட்ட பயணிகள் சுதாரித்துக்கொண்டு உடனே கீழே இறங்கினர். பயணிகள் அனைவரும் விழிப்புடன் இருந்ததால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர், சுமார் அரை மணி நேரம் போராடி பேருந்தில் பற்றி எரிந்த தீயை முழுவதுமாக அணைத்தனர். இருப்பினும், தீ விபத்தில் பேருந்தின் பெரும் பகுதி சேதமடைந்தது.

விசாரணை

இந்தத் தீ விபத்துக்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. மின்கசிவு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் தொழில்நுட்பக் கோளாறா என்பது குறித்து காவல்துறையினர் மற்றும் போக்குவரத்துத் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியார் காற்றாலை டவரை அகற்றக்கோரி மின்கோபுரத்தில் ஏறி போராட்டம்

கயத்தாறு: தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு தாலுகா வெள்ளாளங்கோட்டை பஞ்சாயத்துக்கு உட்பட்ட சூரியமினிக்கம் கிராமத்திற்கு மேற்கே அமைந்துள்ள குளத்தின் உள்ளே தனியார் காற்றாலை நிறுவனத்துக்கு சொந்தமான 7 மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு மின் கம்பிகள் பொருத்தும் பணிகள் நடந்து வருகிறது. கிராமத்துகுளத்தில் மின் கோபுரங்கள் அமைத்தால் விவசாயம் பாதிக்கப்படுவதோடு, கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்படும் எனக்கூறி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இதையடுத்து நேற்று சம்பந்தப்பட்ட தனியார் நிறுவன ஊழியர்கள் மின் கம்பிகளை பொருத்தும் பணியில் ஈடுபட வந்துள்ளனர். உடனே கிராம மக்கள் திரண்டு வந்து எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போதுசரவணன் (27) என்பவர் இங்குள்ள மின் கோபுரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டார். உடனடியாக சில பெண்களும் வேறு ஒரு மின் கோபுரங்களில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் அதிகாரிகளும் போலீசாரும் வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். சுமார் 7 மணி நேரம் நடந்த போராட்டத்திற்கு பிறகு குளத்தில் அமைக்கப்பட்ட 2 சிறிய டவர்கள் அகற்றப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. இதையேற்று கிராம மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

# புதுச்சேரி: பெண்கள் பாதுகாப்பு மற்றும் ரெஸ்டோபார் கலாச்சாரத்திற்கு எதிராக மகளிர் காங்கிரஸ் பிரம்மாண்ட உண்ணாவிரத போராட்டம்!




புதுச்சேரி: ஜன.15–

புதுச்சேரியில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு நிலவும் பாதுகாப்பற்ற சூழலைக் கண்டித்தும், கலாச்சாரத்தைச் சீரழிக்கும் வகையில் பெருகி வரும் 'ரெஸ்டோபார்களுக்கு' (Restobar) எதிர்ப்புத் தெரிவித்தும் புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸ் சார்பில் அண்ணா சிலை அருகில் எழுச்சிமிகு உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

மாநில மகளிர் காங்கிரஸ் தலைவி திருமதி. கி.ஸி. நிஷா விங்கி தலைமையில் நடைபெற்ற இந்த அறப் போராட்டத்தில், புதுச்சேரி மாநில காங்கிரஸ் கட்சியின் அனைத்து முக்கியத் தலைவர்களும் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

வி. வைத்திலிங்கம் MP (நாடாளுமன்ற உறுப்பினர்), ஏ.வி. சுப்ரமணியன் (மாநில காங்கிரஸ் தலைவர்) எம். நாரயணசாமி (முன்னாள் முதலமைச்சர்) மற்றும் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், மாநில நிர்வாகிகள் அனைவரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு NR & BJP அரசுக்கு எதிராகக் கண்டன உரையாற்றினர்.

கல்வி நிறுவனங்கள் மற்றும் பணியிடங்களில் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கத் தவறிய என்.ஆர்.காங்கிரஸ் பாஜக கூட்டணி அரசைக் கண்டித்தல். குடியிருப்புப் பகுதிகள், பள்ளிகள் மற்றும் கோயில் களுக்கு அருகாமையில் அதிக அளவில் ரெஸ்டோபார் களுக்கு அனுமதி வழங்கி, மாநிலத்தின் அமைதியைக் கெடுக்கும் அரசின் போக்கை எதிர்த்தல்.

பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மதுக்கூடங்களின் உரிமத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் மற்றும் புதிய பார்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது என வலியுறுத்தல்.

உண்ணாவிரதத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய மாநிலத் தலைவி A.R. நிஷா, "பெண்களின் பாதுகாப்பு குறித்துக் கவலைப்படாமல், வருவாயை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு மது கலாச்சாரத்தை இந்த அரசு திணித்து வருகிறது. உடனடியாக இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றால், மாநிலம் தழுவிய போராட்டங்களை மகளிர் காங்கிரஸ் முன்னெடுக்கும்" என எச்சரித்தார். நேற்று காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்த உண்ணா விரதப் போராட்டத்தில் ஆயிரக் கணக்கான காங்கிரஸ் தொண்டர்களும், பொதுமக்களும் திரளாகக் கலந்துகொண்டு தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.



சென்னை தலைமை இடமாக கொண்டு இந்தியா முழுவதும் 23 மாநிலங்களில் 1,050 மேற்பட்ட பயிற்சி மையங்களின் எஸ்.ஐ.பி., அபாஸ், மாணவர்களுக்கு கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் அபாகஸ் போட்டி நடத்தி வருகிறது. இந்தாண்டுக்கான மண்டல அளவிலான அபாகஸ் போட்டி நேற்று புதுச்சேரி அடுத்துள்ள பட்டானூர் சங்கமித்ரா கன்வென்ஷன் சென்டரில் நடந்தது.

இப்போட்டியில் புதுச்சேரி, காரைக்கால், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் இருந்து 1,500 மாணவர்கள் பங்கேற்றனர். இரண்டு சுற்றுகளாக நடந்த போட்டியில் மொத்தம் 700 மாணவர்கள் வெற்றி பெற்றனர். அவர்களுக்கு பரிசளிப்பு விழா நடந்தது. விழாவில் சிறப்பு விருந்தினராக புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி கலந்து கொண்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். நிகழ்ச்சியில், எஸ்.ஐ.பி.,அபாகசின் தலைமை அதிகாரி சஞ்ஜிவ் மேனன், மாநில தலைவர் ரவிசங்கர், முகேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். போட்டிக்கான ஏற்பாடுகளை வினோத், சற்குணன் மற்றும் அவர்களது அணியினர் செய்திருந்தனர்.



மாண்புமிகு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரவலசு ஊராட்சியில் இன்று (14.01.2026) நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா- 2026 - னை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.இ.பிரகாஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி.பிரியா உட்பட பலர் உள்ளனர்.

# சேலம் சரகத்தில் 34 காவல் ஆய்வாளர்கள் மாற்றம்.

சேலம். ஜன.15–

சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி,சேலம் சரகத்தில் 8 காவல் ஆய்வாளர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் வரும் மே மாதம் நடைபெற உள்ள நிலையில், தமிழக காவல் துறை அதற்கான அடிப்படை பணிகளை தொடங்கியுள்ளது.தேர்தல் விதிமுறைகளின்படி, காவல் ஆய்வாளர்கள் ஒரே காவல் நிலையத்தில் 3 ஆண்டுகள் பணியாற்றி இருந்தால், அவர்களை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும். இதற்கான பணிகள் தொடங்கியுள்ள நிலையில், சேலம் சரகத்தில் 34 காவல் ஆய்வாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, கொளத்தூர் காவல் ஆய்வாளர் தொல்காப்பியன், தாரமங்கலம் காவல் ஆய்வாளர் சுப்பிரமணியன், ஓமலூர் காவல் ஆய்வாளர் அங்கப்பன் ஆகியோர் கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதேபோல, ஏற்காடு காவல் ஆய்வாளர் கந்தவேல், இரும்பாலை காவல் ஆய்வாளர் மெட்டில்டா ஜோஷி, தம்மம்பட்டி காவல் ஆய்வாளர் சண்முகம், மேட்டூர் காவல் நிலைய ஆய்வாளர் அம்சவள்ளி, கொண்டலாம்பட்டி அனைத்து மகளிர் நிலைய காவல் ஆய்வாளர் உமா பிரியதர்ஷினி, ஆத்தூர் டவுன் காவல் ஆய்வாளர் அழகுராணி, மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் வளர்மதி உள்பட நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம் சரகத்தில் 34 காவல் ஆய்வாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை சேலம் சரக டிஐஜி சந்தோஷ் ஹடி மணி பிறப்பித்துள்ளார்.

# சத்தியமங்கலம் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை சார்பில் 200 நபர்களுக்கு மாதாந்திர நலத்திட்ட உதவிகள் புத்தாண்டு பொங்கல் சிறப்பு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்



செஞ்சி,ஜன.15:

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சத்தியமங்கலம் இங்கி வரும் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு 200 குடும்பங்களுக்கு மாதாந்திர உதவிகள் அன்னதானம் நலத்திட்ட மற்றும் வழங்கும் நிகழ்ச்சி சத்தியமங்கலம் வள்ளலார் தர்ம சாலையில் நடைபெற்றது.

இதில் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை நிறுவனர் ஞானமாணிக்கம் தலைமை தாங்கினார் விழுப்புரம் வடக்கு மாவட்ட சமரசசுத்த சன்மார்க்க சத்ய சங்கம் செயலாளர் முத்து கார்த்திகேயன் முன்னிலைவகித்தார் ஞானஒளி சமூக உதவி அறக்கட்டளை கிளை மேலாளர் வெண்ணிலா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறப்புவிருந்தினராக சத்தியமங்கலம் சாய் அகாடமி நிறுவனர் வசந்தகுமார் கலந்து கொண்டு மாற்றுத் திறனாளிகள் 200 நபர்களுக்கு உணவு அரிசி, காய்கறிகள், பெட் ஷீட், புடவை,ஷர்ட், உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் ஞான ஒளி சமூக உதவி அறக் கட்டளை தொடர்ந்து ஆதரவற்ற முதியவர்கள் மாற்றுத்திறனாளிகள் என பல்வேறு தரப்பு மக்களுக்கு தொடர்ச்சியாக மாதந்தோறும் நலத்திட்ட உதவிகளை வழங்கி கொண்டு வருகின்றனர் முதியோர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக வசந்தகுமார் கூறினார். மேலும் மாற்றுத்திறனாளி தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை நிர்வாகிகள் ஆரோக்கியமாரி, மோச்ச ராகினி, ரோஸ்மேரி, ஜோசப், ரவிச்சந்திரன், ரமணி, வர்ஷா, சுமதி, ஜாஸ்மின் ப்ளோரா ,எட்வின் கலந்து கொண்டனர் இறுதியில் மகளிர் அணி பிரேமா நன்றி உரை வழங்கினார்.

# இந்தாண்டுக்கான பெரியார் விருது இயக்குநர் மாரி செல்வராஜ் மற்றும் எழுத்தாளர் பெருமாள் முருகன் ஆகியோருக்கு வழங்கப்படும்: தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை: ஜன.15–

இந்தாண்டுக்கான பெரியார் விருது இயக்குநர் மாரி செல்வராஜ் மற்றும் எழுத்தாளர் பெருமாள் முருகன் ஆகியோருக்கு வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. ஜனவரி 17ல் பெரியார் திடலில் நடைபெறும் பொங்கல் விழாவில் விருதுகளை கி.வீரமணி வழங்கவுள்ளார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தந்தை பெரியார் முத்தமிழ் மன்றம் 32 ஆண்டுகளாக ஒவ்வோர் ஆண்டும் கலை. இலக்கியம். அறிவியல், சமூகப்பணி, விளையாட்டு, சூழலியல்.. தொழில்.

கல்வி போன்ற பல்வேறு துறைகளில் சாதனை படைக்கும் பெருமக்களுக்கு 'பெரியார் விருது' வழங்கிச் சிறப்பித்து வருகிறது. அந்த வகையில் இருவருக்கு 2026 ஆம் ஆண்டுக்கான 'பெரியார் விருது' அறிவிக்கப்பட்டுள்ளது. சமூக நீதிச் சிந்தனையுடன் செயல்பட்டு தமது படைப்புகளால் பல்வேறு சமூக அவலங்களை வெளிப்படுத்தி வரும் எழுத்தாளர் பெருமாள்முருகன் அவர்களுக்கும், தமது திரைப்படங்களால் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான குரலை ஓங்கி ஒலித்து,

முற்போக்குச் சிந்தனையுடன் செயல்பட்டு சாதனைகள் படைத்து வரும் திரைப்பட இயக்குநர் மாரி செல்வராஜ் அவர்களுக்கும் வழங்கப்படவிருக்கிறது. இந்த விருது சென்னை பெரியார் திடலில் ஜனவரி 17 சனி மாலை 4 மணியளவில் தொடங்கி நடைபெறவுள்ள திராவிடர் திருநாள் தமிழ்ப் பத்தாண்டு. பொங்கல் விழாவில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களால் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் வெண்கலப் பதக்கம் சங்கராபுரம் மாணவி வைஷ்ணவிக்கு பாராட்டு.



தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை சார்பில் தேனி மாவட்டத்தில் பாரதியார் தினம் மற்றும் குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் உள்ள சூர்யா ஸ்போர்ட்ஸ் கிளப்பில் பயிற்சி பெற்ற,

ஜெயம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பு பயின்று வந்த மாணவி வி.வைஷ்ணவி, வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். இந்த வெற்றியைத் தொடர்ந்து மாணவி வைஷ்ணவி சங்கராபுரம் காவல் ஆய்வாளர் விநாயக முருகன் அவர்களை நேரில் சந்தித்தார். அப்போது காவல் ஆய்வாளர் அவர்கள் மாணவியை பாராட்டி, எதிர்காலத்தில் மென்மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்து தெரிவித்தார்.




ஸ்வாமி விவேகானந்தரின் 163வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கேலோ பாரத் அமைப்பின் சார்பில் தென் மண்டல இடைக்கல்லூரி வாலிபால் (ஆண்கள்) போட்டி 10 மற்றும் 11 ஜனவரி 2026 ஆகிய தேதிகளில், புதுச்சேரி லாஸ்பேட் பகுதியில் அமைந்துள்ள அடல் பிஹாரி வாஜ்பாய் பன்முக உள்கூட அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியின் துவக்க விழா, புதுச்சேரி வாலிபால் சங்கத்தின் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினரான திரு. P.M.L. கல்யாணசுந்தரம், புதுவை பல்கலைக்கழக விளையாட்டுத் துறை இயக்குநர் Dr. M. இளையராஜா, மாநிலச் செயலாளர் பனீர்செல்வம் மற்றும் CWC உறுப்பினர் செல்வி வேதாஞ்சலி ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. இந்த தென் மண்டல அளவிலான போட்டியில் புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு கல்லூரி அணிகள் பங்கேற்றன. மொத்தமாக சுமார் 316 வீரர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டியின் முடிவில் பரிசுகள் வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு: முதல் இடம் – அரிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம் (ரூ.20,000/) இரண்டாம் இடம் – மாஸ் உடற்கல்வி கல்லூரி, வானூர் (ரூ.10,000/) மூன்றாம் இடம் – எம்.ஜி.ஜி.ஏ.சி. கல்லூரி, கேரளா (ரூ.5,000/) நான்காம் இடம் – தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி (ரூ.2,500/) பரிசளிப்பு விழா, மாநிலத் தலைவர் Dr. கோகுல்ராஜ், மாநில இணை அமைப்பு செயலாளர் அருண், புதுவை பல்கலைக்கழக உதவி பேராசிரியர் Dr.இளங்கோவன், NEC உறுப்பினர் தீபன் மற்றும் விஷ்வா ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. இந்த முழுப் போட்டியையும் வட தமிழ்நாடு கேலோ பாரத் தலைவர் Dr. உதயச்சந்திரன் அவர்கள் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடத்தினார்.

# முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு டிடிவி தினகரன் பிறந்தநாள் வாழ்த்து..!!

சென்னை: ஜன.15–

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், முன்னாள் முதலமைச்சரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளருமான அன்பிற்குரிய நண்பரும்,

சகோதரருமாகிய ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கு எனது மனமார்ந்த பிறந்தநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஓ.பன்னீர்செல்வம் நீண்ட ஆயுளோடும், பூரண உடல்நலத்தோடும் தொடர்ந்து மக்கள் பணி ஆற்ற வேண்டும் என எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# ஆங்கிலத்தில் அசத்தி வரும் 6 வயது சிறுமி கிட்ஸ் புத்தகம் ஆப் ரெக்கார்ட்சில் இடம் பிடித்து சாதனை




திருப்பூர், ஜன.15:

திருப்பூர் பல்லடம் ரோடு கணபதிபாளையம் பகுதியை சேர்ந்தவர் குணா. இவரது மனைவி மஞ்சு. இவர்களது மகள் விதுஷா (6). ஜெய் சாரதா பள்ளியில் 1 ம் வகுப்பு படித்து வருகிறார். சிறு வயதிலேயே ஆங்கிலத்தில் ஆர்வம் கொண்ட சிறுமி அதில் தனித்துவமாக செயல்பட்டு வந்தார். ஆங்கில மொழியை வேகமாகவும் கற்று வந்தார். இந்த நிலையில் 40 ஆங்கில சொற்களை 45 வினாடிகளில் வேகமாக வாசித்து உலக சாதனை படைத்தார். இது கிட்ஸ் புத்தகம் ஆஃப் ரெக்கார்ட்ஸ் அனுப்பிவைக்கப்பட்டது. உடனே இது அங்கீகரிக்கப்பட்டு மாணவிக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. மேலும், கிட்ஸ் புத்தகம் ஆப் ரெக்கார்ட்சில் மாணவியின் சாதனையும் இடம்பெற்றது. மேலும் அவர்கள் அனுப்பிய வாழ்த்து சான்றிதழில் கூறியிருப்பதாவது:

அன்பார்ந்த சாதனையாளர்,

உங்கள் அபூர்வமான சாதனை உலகில் ஒரு புதிய முத்திரையை பதித்துள்ளது. கிட்ஸ் புத்தகம் ஆஃப் ரெக்கார்ட்ஸ்இல் இடம் பெற்றதன் மூலம், உங்கள் ஆர்வம், படைப்பாற்றல் மற்றும் அர்ப்பணிப்பு சாதனையாக மாறியுள்ளது என்பதை நீங்கள் நிரூபித்துள்ளீர்கள்.

இந்த மதிப்புமிக்க தளம், தனித்துவமான திறமைகள், ஊக்கமளிக்கும் குழந்தைகள் மற்றும் மகத்தான சாதனைகளை கொண்டாடுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

உங்கள் சாதனை, சிறப்பிற்கான உங்கள் திறன் மற்றும் உயர்ந்த கனவுகளுக்கான உங்கள் தைரியத்தை வெளிப்படுத்துகிறது.

இந்தச் சான்றிதழ், சிறப்பு பரிசு மற்றும்

கிட்ஸ் ஹால் ஆப் பேம் உறுப்பினர் தகுதி உங்கள் அதிசயமான பயணத்தின் அடையாளங்களாகும். உங்கள் சாதனை கே பி ஆர் இணையதளத்தில் ஒளிர்கிறது. நீங்கள் ஒளிரும் நட்சத்திரம் என்பதற்கும், உங்கள் சிறப்புத் திறன் அளவில்லாதது என்பதற்கும் சான்றாகும். எண்ணற்ற இளம் மனங்களை தொடர்ந்து ஊக்குவிக்கவும், மேலும் உயரங்களை எட்டிக் கொண்டே செல்லவும், எதிர்கால சாதனைகளுக்கான பாதையை ஒளிரச் செய்யவும். உலகம் உங்களை கொண்டாடுகிறது! அன்புடன், கிட்ஸ் புத்தகம் ஆஃப் ரெக்கார்ட்ஸ் குழு என குறிப்பிடப்பட்டுள்ளது. சாதனை படைத்த மாணவியை பலரும் பாராட்டி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் முதல்முறையாக பிரேம் வாலிபால் லீக் போட்டி.

## ஈரோடு தயா அறக்கட்டளை நிறுவனத் தலைவர் என் எம் பிரதீப் தொடங்கி வைத்து பரிசு வழங்கினார்






ஈரோடு. ஜன. 15

தமிழ்நாட்டில் முதல்முறையாக பிரேம் வாலிபால் லீக் போட்டி நடைபெற்றது இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறந்த பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் முதல்முறையாக தர்மபுரி மாவட்டத்தில் பிரேம் வாலிபால் லீக் போட்டி. நடைபெற்றது.

தமிழ்நாட்டில் முதல்முறையாக பள்ளி, கல்லூரிகளுக்கு இடையிலான ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பிரிவுகளில் கலந்து கொண்ட, பிரேம் வாலிபால் லீக் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியானது கடந்த ஜனவரி எட்டாம் தேதி முதல் 11ஆம் தேதி வரை சிறப்பாக நடைபெற்றது. இதில் தமிழகத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

விளையாட்டு மேம்பாட்டு கழகம் சார்பாகவும், தமிழ்நாடு அரசு சார்பாகவும், இந்த விளையாட்டுப் போட்டி மிகப் பெரிய அளவில் தர்மபுரி மாவட்டத்தில் நடைபெற்றது.

இந்தப்போட்டிகளில் ஈரோடு தயா அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் என் எம் பிரதீப் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் 15 பேருக்கு, தயா அறக்கட்டளையின் சார்பாக கல்லூரிகளில் படிப்பு மற்றும் விளையாட்டுகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இலவசமாக வழங்கி 2026 ஆம் ஆண்டிற்கான கல்வி ஆண்டில் படிப்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக மாணவ, மாணவிகளிடம், ஈரோடு ஈரோடு தயா அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் என். எம் பிரதீப் தெரிவித்தார்.

## 140 மருத்துவ மாணவர்களுக்கு மடிக்கணினி மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் வழங்கினார்.



கள்ளக்குறிச்சி ஜன 15

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மருத்துவக் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவ, மாணவியர் களுக்கு மடிக்கணினி களை மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் வழங்கினார்.

மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் எம்.எஸ் பிரசாந்த் இது குறித்து கூறியதாவது:

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் 140 மாணவ, மாணவியர் களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி தமிழ்நாட்டில் துவங்கப் பட்ட புதிய மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றாகும். கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி தமிழ்நாட்டில் உள்ள சிறந்த மருத்துவக் கல்லூரியில் ஒன்றாகும்.

இக் கல்லூரியில் தற்போது புதிய பாடப்பிரிவுகள் தொடங் கப்பட்டு வருகிறது. புதிய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டு வருகிறது.நாட்டி லேயே தமிழ்நாட்டில் தான் அதிக எண்ணிக் கையில் மருத்துவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

தனித்திறமையை வளர்க்க வேண்டும்:

நீங்கள் படித்து முடித்து விட்டு மருத்துவராக வெளியே வரும்போது மருத்துவத் துறையில் பல்வேறு புதிய திறன்களை பெற்று வர வேண்டும். தற்போது உலகில் பல்வேறு புது வகையான நோய்களும், அதற்கான புது வகையான மருத்துவத் தொழில்நுட்பங்களும் வளர்ந்து கொண்டே வருகின்றன. எனவே நீங்கள் மருத்துவத் துறையில் உங்கள் தனித்திறமைகளை தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களது பாடத்திட்டம் 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேம்படுத்தப்படும். ஆனால் தற்போது மருத்துவத் தொழில் நுட்பம் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே செல்கிறது. எனவே நீங்கள் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இப்போது வழங்கப்படும் மடிக் கணினிகளை நீங்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு உங்களது மருத்துவ அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பவானி, மருத்துவர்கள், அரசு அலுவலர்கள், மருத்துவ மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## திமுக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!



சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ பிரபு தன் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர,பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் 247 பேருக்கு தமிழ் புத்தாண்டு மற்றும் தை 1 பொங்கல் பண்டிகையொட்டி தலா 2000 பரிசுத்தொகை அளித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## கரும்பு அரவை இயந்திரத்தில் சிக்கி இருவர் உயிரிழப்பு!

சிவகங்கை: ஜன.15–

தனியார் சர்க்கரை ஆலை பராமரிப்பு பணியின்போது தவறுதலாக அரவை இயந்திரத்தில் சிக்கி இரு தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மோகனசுந்தரம் (35) மற்றும் பொன்னழகு (59) ஆகியோரின் உடல்களை மீட்ட போலீசார் விபத்து குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் புதுவை மக்களுக்கு வெளியிடும் தை பொங்கல் திருநாள் வாழ்த்து



புதுச்சேரி, ஜன. 15–

மக்கள் விரோத ஆட்சியை களைந்து மக்களுக்கான ஆட்சியை உருவாக்க தை பொங்கல் திருநாளில் முடிவெடுப் போம் வாரீர்.!!!.

தமிழர் திருநாளான தைப்பொங்கல் திருநாளை புதுவை மற்றும் உலகம் முழுவதும் மகிழ்ச்சியாக கொண்டாடும் எனது இனிய தமிழ் சொந்தங்களுக்கு ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

அனைத்து தரப்பு மக்களும் எல்லா வளமும், நலமும் பெற்று இன்புற்று வாழ வேண்டும். பொங்கல் திருநாளை கொண்டாடும் தமிழ் மக்களின் வாழ்வில் வளர்ச்சியும், விவசாயிகளின் வாழ்வில் முன்னேற்றம் அடைய ஆண்டவனை வேண்டுகிறேன். பழையன கழிதலும் புதிய புகுதலும் என்பது சான்றோர் வாக்கு. அது போல வாழ்வில் இதுவரை ஏற்பட்ட துயரங்கள் கழிந்து, புதிய ஒளிமயமான வாழ்க்கை, தை பிறந்தால் வழி பிறக்கும் என்கிற பழமொழிக்கு இணங்க இந்த பொங்கல் திருநாள் மக்கள் வாழ்வில் வளம், நலம், அமைதி, மகிழ்ச்சி , சகோதரத்துவம் ஆகியவை செழித்து ஓங்கி ஒரு நல்ல மாற்றத்தையும் , திருப்பத்தையும் ஏற்படுத்தி, புதுவையில் இரட்டை என்ஜின் மக்கள் விரோத ஆட்சியை களைந்து 2026 இல் மக்களுக்கான ஒரு ஆட்சி அமைத்து ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த பொங்கல் திருநாளை பெற்றோர் , குழந்தைகள் மற்றும் குடும்ப நண்பர்களுடனும் சேர்ந்து உறவாடி மகிழ்ந்து கொண்டாட வேண்டும் என்று ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொண்டு எனது இதய பூர்வமான தை பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

அன்புடன்

ஆர்.எல். வெங்கட்ராமன் மாநில தலைவர் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் புதுச்சேரி.

நீதிக்கதிர் எக்ஸ்பிரஸ் காலை நாளிதழ் சார்பாக அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்...

## அய்யலூர் பேரூராட்சி சார்பில் பொங்கல் விழா



திண்டுக்கல் மாவட்டம் அய்யலூர் முதல் நிலை பேரூராட்சியில் பேரூராட்சி தலைவர் கருப்பன் தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது விழாவில் பேரூராட்சி செயல் அலுவலர் பத்மலதா, உடன் பேரூராட்சிக்கு உட்பட்ட கவுன்சிலர்கள், மாவட்ட மாணவரணி செயலாளர் தினேஷ் முத்துகிருஷ்ணன், பதிவரை எழுத்தர் மோகன், பணியாளர்கள் கலந்து கொண்டனர் பணியாளர்களுக்கு இசை நாற்காலி, கோல போட்டி, பாட்டிலில் தண்ணீர் நிரப்பும் போட்டி, பல வகையான போட்டிகள் வைக்கப்பட்டு போட்டியில் வென்றவர்களுக்கு பரிசுகளை பேரூராட்சி தலைவர் கருப்பன் வழங்கி மகிழ்வித்தார்.

## ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா..!



வந்தவாசி, ஜன 15:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு மன்ற ஒருங்கிணைப்பாளர் பெ.பார்த்திபன் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர்கள் க.வாசு, கோ.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் முதல்வர் பா.சீனிவாசன் வரவேற்றார். தென்னாங்கூர் மண்டிசை பாடகர் ரஜினி நாட்டுப்புற பாடல்களை பாடினார். இந்த நிகழ்வில் ஜவகர் சிறுவர் மன்ற மாணவர்கள் சிலம்பம், கீபோர்ட், இசை, ஓவியம் உள்ளிட்ட பயிற்சிகளை மேற்கொண்டு பரிசுகளை பெற்றனர். மேலும் அனைவரும் சமத்துவ பொங்கல் விழாவை கொண்டாடினர். நிகழ்ச்சியில் ஆசிரியை கண்மணி, ஓவிய ஆசிரியர் ரமேஷ், தபேலா கலைஞர் ஜேம்ஸ், சிலம்பக் கலைஞர்கள் பெரியசாமி, சந்தோஷ உள்ளிட்ட மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்றனர்.

## ஏற்காட்டில் நடந்த ஏடாகுடம் ஒன்ஸ்மோர் கேட்ட பார்த்திபன் காசு இருந்தா மட்டும் தான் சொன்ன சாலா இறுதியில் அதிர்ச்சி





சேலம். ஜன. 15–

ஏற்காட்டில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார். இன்ஸ்டாகிராம் மூலம் பழகிய காதலன், உல்லாசமாக இருந்தபோது பணம் கேட்டதால் ஏற்பட்ட தகராறில் அப்பெண்ணை சேலையால் கழுத்தை நெரித்துக் கொன்றது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் உள்ள தனியார் தங்கும் விடுதி ஒன்றில் 35 வயது இளம்பெண் நிர்வாண நிலையில் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இந்த சம்பவம் தொடர்பாக ஊழியர்கள் ஏற்காடு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனே சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் அந்த இளம்பெண்ணின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனையடுத்து போலீசார் தங்கும் விடுதி ஊழியர்களிடம் விசாரணை நடத்தினர். அப்போது நேற்று மதியம் வாலிபருடன் அந்த இளம்பெண் அறை எடுத்து தங்கியதாகவும், அவர்கள் உணவுக்கு கூட அறையை விட்டு வெளியில் வரவில்லை என்று தெரிவித்தனர். பின்னர் சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி போலீசார் தீவிர விசாரணையில் இறங்கினர். அப்போது போலீஸ் விசாரணையில் பல்வேறு அதிர்ச்சி தகவல் வெளியானது.

கொலை செய்யப்பட்ட பெண் தர்மபுரி மாவட்டம் ஏரியூரை அடுத்த ஏர் கோலபட்டி பகுதியை சேர்ந்த கோவிந்தராஜ் மனைவி சாலா (33) என்பது தெரியவந்தது. கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து பிள்ளைகளுடன் தாய் வீட்டில் வசித்து வந்தார். திருமணமான இவருக்கும் சேலம் மாவட்டம் இளம்பிள்ளை அருகே பார்த்திபன் (35) என்பவருடன் இன்ஸ்டா மூலம் சாலாவுக்கு பழக்கம் ஏற்பட்டு இருவருக்கும் இடையே கள்ளக்காதலாக மாறியுள்ளது.

இதனையடுத்து சாலா, பார்த்திபன் ஆகியோர் நேற்று ஏற்காடுக்கு வந்து தனியார் விடுதியில் அறை எடுத்து தங்கி இருவரும் உல்லாசமாக இருந்துள்ளனர். பின்னர் சாலா பார்த்திபனிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்துள்ளார். பணம் கொடுத்தால் தான் நாம் மீண்டும் உல்லாசமாக இருக்க முடியும் என்று சாலா திட்டவட்டமாக கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பார்த்திபன் சேலையால் கழுத்தை நெரித்து சாலாவை கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பித்துள்ளார். இதையடுத்து போலீசார் இளம்பிள்ளைக்கு விரைந்து சென்று பார்த்திபனை சுற்றி வளைத்து கைது செய்தனர். உல்லாசத்தின் பணம் கேட்டு டார்ச்சர் செய்த இளம்பெண் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கொலை நடந்த தனியார் தங்கும் விடுதிக்கு போலீசார், தாசில்தார் செல்வராஜ் முன்னிலையில் சீல் வைத்தனர்.

# தமிழ்நாடெங்கும் புதுப்பானையில் பொங்கும் பொங்கல் மகிழ்ச்சிப் பொங்கலாக அமையட்டும் : முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!!

சென்னை : ஜன.15–

பொங்கல் திருநாளையொட்டி மக்களுக்கு நல்வாழ்த்துகளை தெரிவித்துள்ளார் முதல்வர் மு.க. ஸ்டாலின். அதில், “உலகத் தமிழர் அனைவருக்கும் தமிழ்ப் பண்பாட்டுப் பெருநாள் தைத்திருநாள் உழவைப் போற்றும் அறுவடைத் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சரிசி, சர்க்கரை, தித்திக்கும் செங்கரும்பு, புதிய வேட்டி சேலை, ரூ. 3,000 ரொக்கம் என நமது திராவிட மாடல் அரசு வழங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பால் தமிழ்நாடெங்கும் பொங்கலை மிகச் சிறப்பாகக் கொண்டாட மக்கள் தயாராகி விட்டனர்.

நானும், (ஜனவரி 14) சென்னை சங்கமம் கலைவிழா, ஜனவரி 17 அன்று உலகப் புகழ்பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு என பொங்கல் சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஆர்வத்துடன் ஆயத்தமாகியுள்ளேன்.

அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம், கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகள், தூய்மைப் பணியாளர்கள் செவிலியர்கள் எனப் பல்வேறு தரப்பினரின் நீண்டநாள் கோரிக்கைகள் நிறைவேற்றம் என இந்தப் பொங்கல் அனைவருக்கும் மகிழ்ச்சிப் பொங்கலாக அமையவேண்டும் என மக்களின் மனமறிந்து நமது அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம், அனைவரும் வெல்வோம் ஒன்றாக என நாள்தோறும் நலத்திட்டங்கள் தொடர்கின்றன.

அடுத்த 5 ஆண்டுகள் செய்ய வேண்டிய பணிகளுக்கும் இப்போதே தயாராகும் வகையில், தமிழ்நாட்டு மக்களிடம் “உங்க கனவ சொல்லுங்க” என அவர்களின் கோரிக்கைகள், தேவைகளைக் கேட்டறிந்து அவற்றை 2030 க்குள் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளேன்.

கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அமைதி, மத நல்லிணக்கம், சமத்துவம் என ஆரோக்கிய அரசியலை முன்னெடுக்கும் இந்த நல்லாட்சி, திராவிட மாடல் 2.0 வடிவில் தொடர வேண்டும் என மக்களான நீங்களும் மனப்பூர்வமாக முடிவெடுத்து விட்டீர்கள்.

பொங்கல் திருவிழாவிற்காக வெளியூர் சென்று திரும்புவோர் பாதுகாப்பாக பயணங்களை மேற்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உழவர் பெருங்குடி மக்களை வணங்கி, புத்தாடை, வண்ணக் கோலம், உறவினர்களைச் சந்தித்து மகிழும் உற்சாகம், விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்ச்சிகள், கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் பண்பு ஆகியவற்றோடு தமிழ்நாடெங்கும் புதுப்பானையில் பொங்கும் பொங்கல் மகிழ்ச்சிப் பொங்கலாக அமைந்திட என எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்! பொங்கலோ பொங்கல்!,” என குறிப்பிட்டுள்ளார்.

# திருவண்ணாமலை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து சேவை: அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.




திருவண்ணாமலை ஜன 15

திருவண்ணாமலை மாநகராட்சி, திண்டிவனம் சாலையில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து சேவையை மக்கள் பயன்பாட்டுக்காக அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சியர் க.தர்பகராஜ், மக்களவை உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவண்ணாமலையில் கடந்த டிச. 27ஆம் தேதி நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் மாநகராட்சியில் புதிதாக கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நினைவு பேருந்து நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

இதைத் தொடர்ந்து, புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து சேவையை பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் செவ்வாய்க்கிழமை தொடங்கிவைத்தார்.

இந்த பேருந்து நிலையத்தில் இருந்து சென்னை கிளாம்பாக்கம், அடையாறு, மாதவரம், புதுச்சேரி, விழுப்புரம், திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, கடலூர், சிதம்பரம், கும்பகோணம், பண்ருட்டி, நெய்வேலி, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், கன்னியாகுமரி, மார்த்தாண்டம், தண்டராம்பட்டு, தானிப்பாடி, மணலூர்பேட்டை ஆகிய வழித்தடங்களில் பேருந்துக்கள் இயக்கப்படும்.

மேலும், புகர் பேருந்துகள் அனைத்தும் இந்தப் பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படவுள்ளது.

இதுதவிர சேத்துப்பட்டு, மேல்மலையனூர், வந்தவாசி போளூர், வேலூர், ஆற்காடு, ஆரணி, செய்யாறு, காஞ்சிபுரம், செங்கம், சேலம், கோவை, பெங்களூரு, தருமபுரி, ஒசூர், திருப்பத்தூர், காஞ்சி, மேல்சோழங்குப்பம் ஆகிய வழித்தடங்களில் இயக்கப்படும் புகர் பேருந்துகள் மற்றும் நகர பேருந்துகள் அனைத்தும் திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து வழக்கம்போல இயக்கப்படும்.

புதிய பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கிவைத்து அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவண்ணாமலை மாநகராட்சியில் புதிதாக பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று முதல்வர் அறிவித்தார்.

அதற்காக திட்ட மதிப்பீடுகள் செய்யப்பட்டு ரூ.34 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் சிறப்பாக நடைபெற்றன.

பணிகள் நிறைவு பெற்ற நிலையில், கடந்த 27.12.2025 அன்று தமிழக முதல்வரால் இந்த புதிய பேருந்து நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக கட்டப்பட்டுள்ள இப்பேருந்து நிலையத்தில் 74 கடைகள், 2 உணவகங்கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனி ஓய்விடங்கள் மற்றும் கழிப்பறைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், மாநில தடகள சங்கத்தின் துணைத் தலைவர் எ.வ.வே.கம்பன், மாநகராட்சி ஆணையர் செல்வபாலாஜி, மாநகராட்சி துணை மேயர் ராஜாங்கம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# சென்னையில் இடைநிலை ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் அமைச்சர் அன்பில் மகேஸ் பேச்சுவார்த்தை.!!



சென்னை: ஜன.15–

சென்னையில் இடைநிலை ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் அமைச்சர் அன்பில் மகேஸ் பேச்சுவார்த்தை நடத்தினார். சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வலியுறுத்தி இடைநிலை ஆசிரியர்கள் 21 நாட்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊதியம் ரூ.15,000ஆக உயர்த்தப் படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ.2,500 ஊதியம் உயர்வு வழங்கி ரூ.15,000ஆக ஊதியம் தரப்படும். பொங்கல் பண்டிகையை இடைநிலை ஆசிரியர்கள் கொண்டாட வேண்டும் என்பதற்காக இடைக் கால நிவாரணமாக ஊதியம் உயர்ந்துள்ளது. இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கை நிச்சியம் நிறைவேற்றப் படும் என தெரிவித்தார். சென்னையில் 20 நாட்களாக போராடி வரும் இடைநிலை ஆசிரியர்களுடன் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சுவார்த்தை நடத்தினர்.

பகுதிநேர ஆசிரியர்களுடன் பேச்சுவார்த்தை முடிந்த நிலையில் இடைநிலை ஆசிரியர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. மே மாதத்திற்குள் பகுதிநேர ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.10,000 ஆக வழங்கப்படும். பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக, சட்ட ரீதியாக பேச்சுவார்த்தை நடக்கிறது. பகுதிநேர ஆசிரியர்களுடனான பேச்சுவார்தைக்குப் பின் அமைச்சர் அன்பின் மகேஸ் பேட்டி அளித்துள்ளார். பணியை உறுதிசெய்ய வேண்டும் என்பதுதான் பகுதிநேர ஆசிரியர்களின் முதன்மை கோரிக்கை என கூறியுள்ளார்.

# மை பாரத் கேந்திரா ஈரோடு சார்பில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள். சூர்யா பொறியியல் கல்லூரி மாணவர்கள் சிறப்பான சாதனை.





ஈரோடு. ஜன. 15

மை பாரத் கேந்த்ரா ஈரோடு சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மைதானத்தில், மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள்.

ஈரோடு தமிழ்நாடு விளையாட்டு, மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது இதில் சூர்யா பொறியியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் பிற கல்லூரி மாணவர்களும் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் மாணவர்கள் தங்களின் விளையாட்டு திறமைகளை வெளிப்படுத்தினர்.

இந்த விளையாட்டு போட்டிகளில் சூர்யா பொறியியல் கல்லூரி மாணவர்கள் கையுந்து வந்து போட்டியில் முதல் பரிசு வென்றனர்.

மேலும் இந்த போட்டியில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் மாணவன் எஸ். மணிகண்டன் மூன்றாம் இடம் பிடித்தார். இந்த போட்டியில் பெண்கள் பிரிவில் சிலம்பம் போட்டியில் கலந்து கொண்ட வி. பிருந்தா மூன்றாம் இடம் பிடித்தார்.

இந்த விளையாட்டு போட்டியை, மை பாரத் கேந்திரா ஈரோடு அமைப்பின் சார்பில் மகேஷ் குமார் அவர்கள் தொடங்கி வைத்து மாணவர்களை உற்சாகப்படுத்தி வாழ்த்தினார்.

போட்டியின் நிறைவில் இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு டி ஷர்ட்டுகள், சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டது.

இந்தநிகழ்ச்சி மாணவர்களின் விளையாட்டு ஆர்வத்தையும் ஒற்றுமையையும் வளர்க்கும் வகையில் அமைந்தது.

ஈரோடு சூர்யா பொறியியல் கல்லூரியின் தாளாளர் கே. கலைச்செல்வன் மற்றும் முதல்வர் எஸ். மனோகரன் பாராட்டி கௌரவித்தனர்.

எம் டிசி ஸ்போர்ட்ஸ் வில்லேஜ் தடகள விளையாட்டுப் போட்டியில் ஈரோடு சூர்யா இன்ஜினியரிங் கல்லூரியை சார்ந்த மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். இந்த போட்டியில் தகவல் தொழில்நுட்பம் துறையை சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவி பி. இனியா சிறப்பான சாதனை படைத்தார்.

நீளம் தாண்டுதல் பிரிவில் முதல் பரிசு வென்றதுடன் 100 மீட்டர் பெண்கள் பிரிவில் அவர் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினார். அவரது இந்த சிறப்பான விளையாட்டு திறனை பாராட்டி, அமைச்சர் சு. முத்துசாமி ரூபாய் 6000 ஊக்கத்தொகையாக வழங்கினார்.

மாணவியின் இந்த சாதனையை கல்லூரிக்கு பெருமை சேர்ப்பதாக இருந்தது என்று ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அவரை பாராட்டினர்.

மேலும் ஈரோடு சூரியா பொறியியல் கல்லூரி தாளாளர் கே. கலைச்செல்வன் மற்றும் முதல்வர் எஸ். மனோகரன் மாணவர்களை பாராட்டை கௌரவித்தனர்.

# திருப்பாவை ஒப்பித்தல் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள்..!




வந்தவாசி, ஜன 15:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பஜனை கோயில் தெருவில் உள்ள ஸ்ரீ கோதண்டராமர் கோவிலில் மார்கழி மாத நிறைவு ஒட்டி மாணவர்களுக்கான திருப்பாவை ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு திருப்பாவை பாசுரங்களை பாடி பரிசுகளை பெற்றனர். இதில் ஓய்வு பெற்ற மாவட்ட மருத்துவ இணை இயக்குனர் டாக்டர் எஸ்.குமார், அன்பு எலக்ட்ரிகல்ஸ் உரிமையாளர் பழனிவேல், வெங்கடேஸ்வரா புக் சென்டர் உரிமையாளர் ரமேஷ், வாசவி ஸ்டோர் உரிமையாளர் சதீஷ், ரோட்டரி கிளப் வீரராகவன், தலைமை ஆசிரியர் வாசு ஆகியோர் பங்கேற்று மாணவர்களை வாழ்த்தி பரிசுகளை வழங்கினர். மேலும் இந்த நிகழ்வில் ஸ்ரீ ராம பஜனை மந்திர கைங்கரிய டிரஸ்ட் நிர்வாகிகள் மற்றும் பக்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். இறுதியில் திருமலை திருப்பதி தேவஸ்தான திருப்பாவை சொற்பொழிவாளர் ஆர். சீனிவாச பெருமாள் ராமானுஜதாசர் நன்றி கூறினார்.

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பானை, கோலப்பொடி விற்பனை விறுவிறுப்பு

பொள்ளாச்சி : ஜன.15–

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொள்ளாச்சி பகுதிகளில் பொங்கல் பானை விற்பனை விறுவிறுப்பாக நடக்கிறது. பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களாக ஆர்.பொன்னாபுரம், முத்தூர், வடக்கிபாளையம், கோட்டூர், ஒடையக்குளம், அம்பராம்பாளையம், சமத்தூர், அங்கலக்குறிச்சி மற்றும் கிணத்துக்கடவு சுற்றுவட்டாரத்தில் சிங்கராம்பாளையம், பகவதிபாளையம் உள்ளிட்ட பல கிராமங்களில், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மண்பாண்ட தொழிலாளர்கள் இரண்டு மாதத்திற்கு முன்பே பானை தயாரிப்பில் முழுவீச்சில் ஈடுபட்டனர். ஆனால், அடிக்கடி மழையால் சரியான நேரத்தில் உலர வைக்க முடியாததால், அதன் உற்பத்தி குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இருப்பினும், களிமண்ணால் செய்யப்படும் பானைக்கு நல்ல வரவேற்பு இருப்பதால், பலர் ஆர்டர் கொடுத்து வாங்கிச்செல்கின்றனர். சிறியது முதல் பெரிய அளவிலான பாணை தயாராகி, விற்பனைக்காக மார்க்கெட்டுகளுக்கு வரப்பெற்றுள்ளது. இன்று (15ம் தேதி) பொங்கல் பண்டிகை என்பதால், பொள்ளாச்சி மார்க்கெட் பகுதி மற்றும் நகரில் உள்ள பல வீடுகளில் விற்பனைக்காக அடுக்கி வைத்துள்ளனர்.

அதனை, நகர் மற்றும் கிராம பகுதியை சேர்ந்த பலரும் நேரில் வந்து வாங்கி செல்கின்றனர். ஒரு பானை ரூ.100 முதல் ரூ.500 வரை விற்பனையாவதாக, தொழிலாளர்கள் தெரிவித்தனர். அதுபோல, நகரில் கடைவீதி, மார்க்கெட் பகுதி மற்றும் வெங்கடேசா காலனி, மகாலிங்கபுரம், கோவை ரோடு, பஸ் நிலைய பகுதி, பாலக்காடு ரோடு, கடைவீதி உள்ளிட்ட பல இடங்களில் வண்ண வண்ண கோலப்பொடிகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. அதனையும் நகரம் மற்றும் கிராம பகுதியினர் தங்கள் விருப்பத்திற்கேற்ப உரிய விலை கொடுத்து வாங்கிச்சென்றனர்.

# பொன்னம்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது:



துவரங்குறிச்சி ஜன 15:

திருச்சி மாவட்டம் , துவரங்குறிச்சி, பொன்னம்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. இவ்விழாவில் பேரூராட்சி செயல் அலுவலர் சோ .அழகேந்திரன் பேரூராட்சித் தலைவர். கே. . சரண்யா நாகராஜ், துணைத்தலைவர் ரதி ரமேஷ் ,மற்றும் பேரூராட்சி வார்டு கவுன்சிலர்கள் ஆ. மகேஸ்வரி 1 .வார்டு என் உறுப்பினர் , வெ.அழகுமணி 2.வார்டு உறுப்பினர், 3. வார்டு உறுப்பினர், கா .முகமது காசிம் 4. வார்டு உறுப்பினர் ,ரா. அப்துல் சலாம் 5.வார்டு உறுப்பினர், சசீரா பேகம் 7.வார்டு உறுப்பினர், சி ஹக்கீம் 8. வார்டு உறுப்பினர், மா. செந்தில் முருகன் 9. வார்டு உறுப்பினர், ஆறுமுகசுந்தர் 10. வார்டு உறுப்பினர் ,மு .சரஸ்வதி 11 வது வார்டு உறுப்பினர், ச. வேல்மணி 12. வார்டு உறுப்பினர் , ப.சின்னம்மாள் 13 வது வார்டு உறுப்பினர் மற்றும் பேரூராட்சி ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அய்யலூர் பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்




**2024-2025 முதல் 2025-2026 ஆண்டு திட்டப்பணிகள் விபரம்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.(லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பள்ளி மேம்பாட்டு மான்ய நிதி 1 (ஆறாவதுநிதிக் குழு மான்யம்) 2024–25 | 3–வது வார்டு தங்கம்மாபட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் மூன்று வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல். | 68.50 |
| 2 | 2024–25 15வது நிதிக்குழு – Tied முதல் தவணை | திட்டப்பணிகள் | 35.95 |
| 3 | 2024–25 15வது நிதிக்குழு – Tied இரண்டாவது தவணை | திட்டப்பணிகள் | 36.00 |
| 4 | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024–2025 | 2–வது வார்டு எ.டி.காலனி முதல் குப்பாநாயக்கர் களம் வரை தார் சாலை அமைத்தல். | 44.00 |
| 5 | அடிப்படை கட்டமைப்பு நிதி 2024–2025 | 11–வது வார்டு கெங்கையூர் சக்திமுத்துமாரியம்மன் கோயில் அருகில் அணுகு சாலையுடன் கூடிய பாலம் அமைத்தல் | 100.00 |
| 6 | அடிப்படை கட்டமைப்பு நிதி 2024–2025 | 13–வது வார்டு கொனையம்பட்டியில் அணுகுசாலையுடன் கூடிய பாலம் அமைத்தல் | 100.00 |
| 7 | அடிப்படை கட்டமைப்பு நிதி 2024–2025 | 11–வது வார்டு கஸ்பா அய்யலூரில் அணுகு சாலையுடன் கூடிய பாலம் அமைத்தல் | 154.48 |
| | | மொத்தம் | 538.93 |

அரசுக்கு செலுத்தவேண்டிய வரியினங்களை குறித்த காலத்திற்கு செலுத்த வேண்டும்.

மரம் வளர்ப்போம் மழைநீர் பெறுவோம்

மாண்புமிகு. இ.பெரியசாமி B.A.B.G.L., ஊரக வளர்ச்சி துறை அமைச்சர்

மாண்புமிகு. அர.சக்கரபாணி B.A., தமிழக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்

திருமிகு. எஸ்.காந்திராஜன் B.A., B.L., M.L.A., சட்டமன்ற திட்ட மதிப்பீட்டு குழு உறுப்பினர்

திரு. செ.சரவணன் இ.ஆ.ப. மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல்

திரு. இரா.ராஜா பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், திண்டுக்கல் மண்டலம்

திருமதி. கு.பத்மலதா செயல் அலுவலர், அய்யலூர் பேரூராட்சி (பொ)



திரு. இரா.கருப்பன் தலைவர், அய்யலூர் முதல்நிலை பேரூராட்சி

திரு. மு.செந்தில் துணைத்தலைவர், அய்யலூர் முதல்நிலை பேரூராட்சி

வார்டு உறுப்பினர்கள் :
வே.முருகேஸ்வரி, நா.நித்யா, கா.மாலா, ரா.ராகுல்பாபா, சி.கிருஷ்ணன், க.சின்னச்சாமி, ரா.பிரியங்கா, செ.மாரியம்மாள், சி.தனலட்சுமி, க.ஜெயலெட்சுமி, சி.தனபாக்கியம், சி.பெருமாள், செ.செல்லமுத்து



## வடமதுரை தேர்வுநிலை பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்




**2025-26-ம் ஆண்டு நடைபெற்று வரும் பணிகள் விபரம்**

| வ. எண் | திட்ட விபரம் | பணிகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மூலதன மானிய நிதி திட்டம் 2025-2026 | 1 | 130.00 |
| 2 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026 | 1 | 175.00 |
| 3 | சிறப்பு நிதிதிட்டம் 2025-2026 | 1 | 134.00 |
| | மொத்தம் | 3 | 439.00 |

மரங்கள் நடுவோம் பிளாஸ்டிக் உபயோகத்தை தவிர்ப்போம்

திரு. S.சரவணன் இ.ஆ.ப. மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல்

திரு. இரா.இராஜா பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், திண்டுக்கல் மண்டலம்

கு.பத்மலதா செயல் அலுவலர் வடமதுரை பேரூராட்சி




திருமதி. G.நிருபாராணிகணேசன் தலைவர் வடமதுரை பேரூராட்சி

மு.மலைச்சாமி துணைத்தலைவர்

வார்டு உறுப்பினர்கள்
போ.பழனியம்மாள், ந.சுப்பிரமணியன், வெ.சு.கார்த்திகேயன், ர.தேன்மொழி, நா.மருதாம்பாள், ம.சகுந்தலா, ச.கவிதா, கா.விஜயா, மு.மகேஸ்வரி, ஜெ.வினோதினி, த.சௌந்தராஜ், ச.கணேசன், இரா.சசிக்குமார்


# புதுச்சேரி முதலமைச்சருக்கு லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் நேரில் சந்தித்து பொங்கல் வாழ்த்து



புதுச்சேரி லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின், புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமியை நேரில் சந்தித்து பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். லட்சிய ஜனநாயக கட்சி சார்பில் வரும் ஜனவரி 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் உப்பளம் துறைமுக மைதானத்தில் பொங்கல் திருவிழா நடைபெற உள்ளது. இந்த விழாவிற்கு அனுமதி கோரியும், விழாவில் பங்கேற்க வருமாறு முதலமைச்சருக்கு ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அழைப்பு விடுத்தார்.

சந்திப்பின் போது முதலமைச்சருக்கு சால்வை அணிவித்து, பூங்கொத்து கொடுத்து பொங்கல் வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்த சந்திப்பின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் அங்காளன், சிவசங்கர் மற்றும் லட்சிய ஜனநாயக கட்சியின் முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருச்சிராப்பள்ளி புனித ஜான் வெஸ்ட்ரி ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், மேயர் அன்பழகன், பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் அருண் நேரு ஆகியோர் பங்கேற்று பொங்கல் பானையில் அரிசியிட்டு சமத்துவ பொங்கல் விழாவினை தொடங்கி வைத்து சிறப்பித்து இவ்விழாவில் நடைபெற்ற கோலப்போட்டியினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் மதுபாலன், உதவி ஆட்சியர் செல்வி. சேஷத்ரிமயும் தீபிசானு, நகர பொறியாளர் சிவபாதம், மாநகராட்சி அலுவலர்கள் , மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நெட்டப்பாக்கம் தொகுதி முழுவதும் வீடு வீடாகச் சென்று கரும்பு வழங்கி பொங்கல் வாழ்த்து: காங்கிரஸ் பிரமுகர் கா. அன்பரசன் நெகிழ்ச்சி!

புதுச்சேரி | ஜன15

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டி கையை முன்னிட்டு, புதுச்சேரி மாநிலம் நெட்டப்பாக்கம் தொகுதி மக்கள் அனைவருக்கும் பொங் கல் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் வகையில், காங்கிரஸ் கட்சியின் முக்கியப் பிரமுகர் திரு. கா. அன்பரசன் அவர் கள் தொகுதி முழுவதும் நேரில் சென்று வாழ்த்து மழையில் நனைந்து வருகிறார்.

பொங்கல் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, நெட்டப் பாக்கம் தொகுதிக் குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் உள்ள இல்லங்களுக்கு கா. அன்பரசன் அவர்கள் நேரில் சென்றார். ஒவ்வொரு வீட்டின் வாசலுக்கேச் சென்று, அங்குள்ள பெரியவர் களிடம் ஆசி பெற்றும், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுடன் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டும், பொங்கலின் அடையாளமான கரும்பினை வழங்கினார்.



தொகுதி மக்கள் அனைவரும் ஒரு சேரப் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்ற நோக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வு, அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. கட்சிப் பாகுபாடின்றி ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் வந்து அன்புடன் வாழ்த்துத் தெரிவித்த அன்பரசன் அவர் களுக்குப் பொது மக்கள் தங்கள் நன்றி யினைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது கா. அன்பரசன் அவர்கள் பேசுகையில்:

"உழவர் திருநாளான இந்தப் பொங்கல் பண்டிகை நெட்டப் பாக்கம் தொகுதி மக்கள் அனைவரது வாழ்விலும் இனிமையையும், வளத்தையும் கொண்டு வர வேண்டும். மக்கள் அனைவரும் ஒற்றுமை யுடனும் மகிழ்ச்சியுடனும் இந்தப் பண்டிகையைக் கொண்டாட எனது மனமார்ந்த வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்கிறேன்," எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

## தட்டாஞ்சாவடியில் சமத்துவப் பொங்கல் விழா:
# டாக்டர் நித்திஷ் ஏற்பாட்டில் உற்சாக கொண்டாட்டம்!

புதுச்சேரி, ஜன. 15–

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு, புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி அய்யனார் கோவில் வளாகத்தில் சமத்துவப் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மிக விமரிசையாக நடைபெற்றது.

தட்டாஞ்சாவடி தொகுதி திமுக பொறுப் பாளர் டாக்டர் ரோ. நித்திஷ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் சிவா கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார். மேலும், சட்டமன்ற உறுப்பினர் கென்னடி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா சரவணன், கதிர்காமம் தொகுதி கழகச் செயலாளர் வடிவேலு மற்றும் ஏராளமான திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாகப் பங்கேற்றனர்.





தொகுதி மக்கள் அனைவரும் ஒன்று கூடி, மதங்களைக் கடந்து சமத்துவப் பொங்கல் வைத்துத் தங்களது மகிழ்ச்சியை வெளிப் படுத்தினர்.

விழாவின் ஒரு பகுதி யாகப் பெண்களுக்குக் கோலப்போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன.

விழாவில் பங்கேற்ற பெண்களுக்குப் புடவைகள் மற்றும் பொங்கல் வைப்பதற்கான எவர்சில்வர் பாத்திரங்கள் (தவளை) வழங்கப் பட்டன.

அத்தியாவசியப் பொருட்களான கரும்பு, வெல்லம் உள்ளிட்ட பொங்கல் தொகுப்பு களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மக்கள் பணியில் என்றும் இணைந் திருக்கும் டாக்டர் நித்திஷின் இந்த முயற்சிக்குத் தொகுதி மக்கள் தங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.


நம்பிக்கை நாயகர்
திருமிகு.
T.T.V. தினகரன் B.E.,
அவர்களின் நல்லாசியுடன்
எனது அன்பு உழவர்கரை சொந்தங்கள் அனைவருக்கும்
இனிய
பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
அன்புடன்
முனைவர். Mu. லாவண்யா
மாநில கழக இணை செயலாளர் (மேற்கு)
அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், புதுச்சேரி
புதுச்சேரி மாநிலம் அன்னை தெரேசா பவுன்டேசன் சேர்மன்
நிறுவனர், சரண் தொண்டு அறக்கட்டளை புதுச்சேரி
அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், உழவர்கரை சட்டமன்ற தொகுதி, புதுச்சேரி


தை
திருநாள்
பொங்கல்
நல்
வாழ்த்துக்கள்
நெட்டப்பாக்கம் தொகுதி, மணமேடு


லட்சிய ஜனநாயக கட்சி
எங்களின் பாசமிகு அன்புத்தலைவர்
திருமிகு. ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்
நிறுவனர் மற்றும் தலைவர்
அவர்களின் நல்வாழ்த்துக்களுடன்
மாநில மகளிரணி சார்பில்
அனைவருக்கும்
இனிய
பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
தலைவர், மாநில மகளிரணி
லட்சிய ஜனநாயக கட்சி மாநில மகளிரணி, புதுச்சேரி மாநிலம்


அனைவருக்கும்
இனிய
சமத்துவ
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
A.P.R.வடிவேல்
தொகுதி கழகச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்
கதிர்காமம் சட்டமன்ற தொகுதி, புதுச்சேரி.

LJK லட்சிய ஜனநாயக கட்சி

# புதுச்சேரி அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தும் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்

JCM ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்



## 60 நாள் நடைபயணம் மற்றும் மக்கள் நலத் திட்டங்கள்!

புதுச்சேரி மாநிலத்தின் 2026 சட்டமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு, லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள் அதிரடியான பல முன்னெடுப்புகளைச் செய்து வருகிறார். குறிப்பாக, மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்க அவர் மேற்கொள்ளவிருக்கும் 60 நாள் நடைபயணம் அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.60 நாள் மாபெரும் நடைபயணம் (பாதயாத்திரை) மக்கள் சந்திக்கும் உண்மையான பிரச்சனைகளைத் தெரிந்துகொள்ள, பொங்கல் பண்டிகை முடிந்தவுடன் புதுச்சேரி முழுவதும் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள் நடைபயணம் மேற்கொள்ள உள்ளார்.



**நோக்கம் :** ஒவ்வொரு தொகுதிக்கும் நேரில் சென்று, பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிதல்

**அரசியல் அதிகாரம் :** சட்டமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 6 தொகுதிகளை Seats ஒதுக்கி, அவர்களுக்கு நேரடி அரசியல் பிரதிநிதித்துவம் வழங்க முடிவு செய்துள்ளார்.

**அரசியல் முக்கியத்துவம் :** இந்த நடைபயணத்தின் முடிவில், மக்களின் கருத்துகளின் அடிப்படையில் கட்சியின் முழுமையான தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.பெண்கள் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான 'மகளிர் பிரகடனம்' பெண்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் பல புரட்சிகரமான வாக்குறுதிகளை அளித்துள்ளார்.

**நிர்வாக மாற்றம் :** சிங்கப்பூர் அல்லது டென்மார்க்' போன்ற நாடுகளுக்கு இணையாகப் புதுச்சேரியின் உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்தப் போவதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

**வேலைவாய்ப்பு :** இளைஞர்களுக்குப் புதுச்சேரியிலேயே தகுதிக்கேற்ற வேலை கிடைக்கச் செய்வதையும், விளையாட்டுத் துறையில் புதுச்சேரி இளைஞர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளார்.

**சுயதொழில் வாய்ப்புகள் :** பெண்கள் சுயமாகத் தொழில் தொடங்கவும், பொருளாதார ரீதியாக முன்னேறவும் சிறப்பு நிதியுதவித் திட்டங்களை அறிவித்துள்ளார்.மக்களுக்கானமுக்கிய திட்டங்கள் மற்றும் வாக்குறுதிகள்புதுச்சேரியை ஒரு 'முன்மாதிரி மாநிலமாக' மாற்ற வேண்டும் என்பதே இவரது குறிக்கோள். அதற்காக அவர் முன்வைக்கும் திட்டங்கள்: 100 கோடி தனிப்பட்ட நிதிக்கு தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், புதுச்சேரி வளர்ச்சி வாரியத்திற்கு (Puducherry Development Board) தனது சொந்தப் பணத்திலிருந்து 100 கோடி ரூபாயை மக்கள் நலப்பணிகளுக்காக வழங்குவதாக ஒரு மிகப்பெரியஅறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

**மக்கள் மீதான அக்கறை :** தற்போதுள்ள ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தோல்வியடைந்துவிட்டதாகக் குற்றம்சாட்டும் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின், 'மாற்றத்தை நோக்கி புதுச்சேரி' என்ற கோஷத்துடன் களம் இறங்கியுள்ளார். அதிகாரத்திற்காக அல்ல, மக்களின் துயரம் துடைக்கவே இந்த நடைபயணம்.' – ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்.

**அடிப்படை வசதிகள் :** சுத்தமான குடிநீர், தரமான இலவச மருத்துவம் மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்துவது இவரது முதன்மைப் பட்டியலில் உள்ளது.

## பெண்களுக்கான முத்தான திட்டங்கள்




## மீனவர்களின் காவலனாக களம் இறங்கிய ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்

### இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட காரைக்கால் மீனவர்களுக்கு ஆதரவு

**புதுச்சேரி/காரைக்கால் :** புதுச்சேரி அரசியலில் புதிய மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட லட்சிய ஜனநாயக கட்சியின் (LJK) தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்,மீனவர்களின் வாழ்வாதாரப் போராட்டங்களில் முன்னின்று செயல்பட்டு வருகிறார். சமீபத்தில் காரைக்கால் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட போது, அவர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகள் மீனவ மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. **மீனவர்கள் சந்திக்கும் சவால்கள்:** காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 11 மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காகக் கடலுக்குச் சென்றபோது,எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தச் செய்தி காரைக்கால் மீனவ கிராமங்களில் பெரும் சோகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களின் நேரடித் தலையீடு மீனவர்களின் கைதைக் கேள்விப்பட்டவுடன், லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள் பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்தார். **குடும்பத்தினருக்கு ஆறுதல்:** கண்ணீருடன் காத்துக்கொண்டிருந்த மீனவப் பெண்களுக்கு ஆறுதல் கூறிய அவர், மீனவர்களைப் பாதுகாப்பாக மீட்டு வரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தனது கட்சி எடுக்கும் என உறுதி அளித்தார். **அரசுக்கு அழுத்தம்:** இந்திய அரசு இலங்கைக்குப் பல வழிகளில் நிதி உதவி அளித்து வரும் நிலையில், தமிழக மற்றும் புதுச்சேரி மீனவர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதைச் சுட்டிக்காட்டிய அவர், இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்று மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு வலுவான கோரிக்கை விடுத்தார். **மீட்பு முயற்சிகள்:** தூதரக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அழுத்தம் கொடுத்து, சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர் களை விரைவாகத் தாயகம் அழைத்து வர அவர் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டார். மீனவர் நலனில் லட்சிய ஜனநாயக கட்சியின் தொலைநோக்கு ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள் மீனவர் சமூகத்திற்காகச் சில முக்கிய வாக்குறுதிகளையும் முன்வைத்துள்ளார். **நிரந்தர பாதுகாப்பு:** மீனவர்கள் அச்சமின்றி மீன்பிடிக்கச் செல்ல கடலோரப் பாதுகாப்பு மற்றும் நவீன தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட வேண்டும். **பொருளாதார உதவி:** கைது நடவடிக்கைகளால் வாழ்வாதாரம் பாதிக்கும் குடும்பங்களுக்குத் தகுந்த நிவாரணம் மற்றும் சட்ட உதவி வழங்க கட்சி எப்போதும் துணை நிற்கும். அரசியல் அதிகாரம்: மீனவர்களின் குரல் சட்டமன்றத்தில் ஓங்கி ஒலிக்க லட்சிய ஜனநாயக கட்சி பாடுபடும். **முடிவுரை :** அரசியலுக்கு வந்த குறுகிய காலத்திலேயே, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்காக, குறிப்பாக மீனவர்களின் உரிமைக்காகக் களத்தில் இறங்கிப் போராடும் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களின் செயல்பாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் அவருக்கு ஒரு 'மக்களுக்கான தலைவர்' என்ற பிம்பத்தை உருவாக்கியுள்ளது.